

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 01.07.2025 அன்று நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். உடன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு குறித்த பரப்புரை துவக்க நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினார். உடன் கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம் எல் ஏ , மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய் பிரகாஷ் , மாநில ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மேயர் சத்யா, மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை , மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம். வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் டாக்டர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன் , மாநில தொ.மு.ச. கிருஷ்ணன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### ஒன்றிய அரசின் வஞ்சகத்தை எடுத்துரைப்போம்!

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம்!

## திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!



திருச்சி ஜூலை 3 -

ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம் எனவும், திமுக அரசின் சாதனைகளும் ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும் இளம் தலைமுறை வாக்காளர்களுக்கு அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக எடுத்துக் கூறுவோம் என திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசியதாவது:-

திருச்சி தெற்கு மாவட்ட திமுகவில் திருவெறும்பூர் மணப்பாறை திருச்சி கிழக்கு ஆகிய மூன்று தொகுதிகள் உள்ளன.

அந்த மூன்று தொகுதிகளிலும் 871 வாக்குச்சாவடிகள் உள்ளன. அந்த வாக்குச்சாவடிகள் நேரடியாக சென்று மக்களிடம் திமுக அரசின் திட்டங்கள் எடுத்து கூறுவது, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு செய்து வரும் வஞ்சகங்களை எடுத்து கூறுவது அதன் மூலம் ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்த திட்டத்தில் மக்களை இணைப்பது மேற்கொள்ள உள்ளோம். மண் மொழி மானம் காக்க தான் ஓரணியில் தமிழ்நாடு என்பது செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்றிய அரசின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறோம் என மக்களிடம் எடுத்து கூறுவோம்.

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய கல்வி நிதி வழங்கப்படவில்லை, RTE நிதி வழங்கப்படாமல் உள்ளது. இது போன்றவற்றை மக்களிடம் எடுத்து கூறுவோம். எதிர்கட்சி யினர் வீடுகளாக இருந்தாலும் அவர்கள் வீட்டிற்கு சென்று அவர்களையும் சந்திப்போம். வாக்குச்சாவடியில் எவ்வளவு பேர் இருந்தாலும் அனைவரின் வீட்டிற்கும் செல்லவிருக்கிறோம்.

ஓரணியில் தமிழர்களாக இணைப்பது தான் முதல் இலக்கு, இரண்டாவது தான் விருப்பபட்டவர் களை கட்சியில் சேர்ப்பது. 18 முதல் 25 வயதுள்ள இளைஞர்களை சந்தித்து அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக திமுக அரசின் சாதனைகளை எடுத்து கூறுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாநகர கழக செயலாளர் மதிவாணன், மாவட்டக் கழக நிர்வாகி கள் கோவிந்தராஜ், செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், ராமசாமி, நகரக் கழகச் செயலாளர் காயாம்பு உடன் இருந்தார்கள்.

### “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை இயக்கம் மூலம்

# தமிழக மக்களை ஒன்று திரட்டுவது தான் இலக்கு!



## அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர் ஜூலை.3.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை இயக்கம் மூலம் தமிழக மக்களை ஒன்று திரட்டுவது தான் இலக்கு என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன்...

ஓரணியில் தமிழ்நாடு என்ற பரப்புரை முழக்கத்தை, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்து, வரும் 45 நாட்களுக்கு ஒவ்வொரு கிராமம், நகரம், பூத் என தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஓரணியில் தமிழ்நாடு என்கிற முழக்கத்தை ஒலிக்கச்செய்ய இருக்கிறது தி.மு.க.

இந்த பரப்புரை இயக்கம் என்பது உறுப்பினர் சேர்க்கும் ஒரு நிகழ்வாக மட்டுமே இருக்கக்கூடாது. தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் ஒன்று திரட்டுவது தான் இதன் முக்கிய நோக்கம் என முதல்வர் ஏற்கெனவே கூறியுள்ளார்.

சாதி, மத, அரசியல் பாகுபாடுகள் இன்று தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரையும் அணுகி, தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அனைத்து அநீதிகளுக்கும் எதிராக ஓரணியில் திரள வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்க உள்ளோம்.

பா.ஜ.க. தமிழ்நாட்டை எப்போதும் வன்மத்தோடு பார்க்கிறது. அ.தி.மு.க. கூட்டணி என்ற பெயரில் அதற்கான அடித்தளம் அமைத்து கொடுக்கிறது.

ஏற்கெனவே பாஜக ஆட்சி அமைத்துள்ள மாநிலங்கள் பாசிசத்தின் பரிசோதனைக் கூடங்களாக மாறி உள்ளது. தமிழ்நாட்டையும் பாசிசம் என்கிற கொடூர விஷத்தை பரிசோதித்து பார்க்கும் பரிசோதனைக் கூடமாக மாற்ற பாஜக அரசு நினைக்கிறது. இந்த நேரத்தில் தமிழ்நாடு மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு அதனை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பெருமைகளைக் கூட அங்கீகரிக்க மனமில்லா அளவுக்கு தமிழ்நாட்டின் மீது வன்மத்தை பாஜக கொண்டுள்ளது.

ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்த பரப்புரை இயக்கம் மூலம் விருப்பம் உள்ள குடும்பத்தினரை திமுகவில் உறுப்பினராக சேர்க்கப்படும். அதன்படி நாளை (ஜூலை 2 ம் தேதி) தஞ்சாவூரில் திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. நாளைய மறு நாள் (ஜூலை 3) முதல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளிலும் வீடு வீடாக சென்று பரப்புரை செய்யப்படும். இந்த பணியில் திமுகவின் பூத் ஏஜெண்டுகள் செயல்படுவார்கள்.

இந்த பரப்புரை இயக்கம் மூலம் தமிழ்நாட்டை பாதுகாக்க ஓரணியில் தமிழ்நாட்டு மக்களை ஒன்று திரட்டுவது தான் முக்கிய இலக்கு என்றார்.

பேட்டியின் போது மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் தி.பழநிவேல், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


கண்ணீர் அஞ்சலி



சுப்பிரமணியபுரம் மதுரை உறியடிமிரசுதரார்

S.R.சோலை அழகர்கோனார் மகனும்

மதுரை மத்திய தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

தெய்வத்திரு. சோ.பால்ராஜ் அவர்களின் தம்பியும்

மதுரை மாநகர் முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர்

பல்ராம் தனுஷ்கோடி

அவர்களின் தந்தை

சோ.தனுஷ்கோடி

அவர்கள்

01.07.2025 அன்று காலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி அஞ்சலி மதுரை நாராயணபுரத்தில் உள்ள பலாமி என்கேளைவ் குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி சடங்கு மதுரை பவர் ஹவுஸில் உள்ள பூர்விக சோலை நந்தவனத்தில் நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சகோதரர்கள் : தெய்வத்திரு. சோ.சுந்தர்ராஜன் தெய்வத்திரு. சோ.பாலகிருஷ்ணன் Sports Officer சோ.நவநீதகிருஷ்ணன் முன்னாள் துணை மேயர் சோ.பரமநாதன் ரயில்வே

மகன்கள் : D.விஷ்ணுகுமார் D.ராமாகாந்த்

வருத்தத்துடன்...

குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.